மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பட்டாவுக்குரிய இடம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இடத்திற்கு உண்டான மதிப்பீட்டை நிர்ணயம் செய்து அந்தத் தொகையைக் கட்டச் சொல்லியிருப்பதன்பேரில்—அவர் பணம் செலுத்தாமலேயே அந்த இடத்திற்கு இலவசமாகப் பட்டா வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கூறியிருந்தார். அவர் கேட்டுக்கொள்கின்ற அடிப்படையிலே மாநகராட்சி மன்றத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.*

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: *30–வது வருடத்திலே கட்டிய வீடுகள் இன்றைக்கு இல்லை. இல்லாத வீடுகளுக்குச் சந்தை விலையிலே கிரயம் பேசுவது என்பது சரியான முறையல்ல. அதற்கு அடிப்படையாக இருக்கின்ற அடிமனைகளுக்கு இலவசமாகப் பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே நீண்ட காலமாக இருக்கின்றார். 30 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தப் பகுதியினுடைய நிலையைப் பற்றி நன்றாகத் தெரியும். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்தப் பகுதியிலே மிகவும் மோசமான நிலையில் இருந்த இடம்கூட, இன்றையதினத்திலே 27 இலட்சம் ரூபாய் செலவிலே மிக நல்ல பூங்காவாக அங்கு அமைக்கப்படுகிறது. அது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலிக்கிறது என்று சொன்னாலே, அதன் மூலமாகக் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறி அமைகிறேன்.*

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி,*

என்ன? Zero hour எல்லாம் முடிந்துவிட்டது. திரு. பால் மனோஜ் பாண்டியன்.

***திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவை வணங்கி, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் நகராட்சி நிர்வாகம் குறித்த முப்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10–25

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள்.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 175 முதல் 178 வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 7–4–2005 ஆம் நாளன்று முன்மொழியப் பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன் மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். திரு. தி. வேல் முருகன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல் முருகன், கொஞ்சம் இருங்கள்.